உ

குமரன்றுணை

சென்னிகுளம்

## அண்ணாமலை ரெட்டியார்

இயற்றிய

# காவடிச்சிந்து.



மதுரை புக்ஷாப்

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு

மு. கிருஷ்ணபிள்ளை அவர்கள்

வெளியிட்டது.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ் பிரஸ், திருமங்கலம்-27.

உ

வேலுமயிலுந் துணை.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிபேரில்

# காவடிச்சிந்து.

## விநாயகர் துதி.

இராகம்-நாட்டை-தாளம்-சாப்பு.

திருவுற் றிலகுசங்கை வரையிற் புகழ்மிகுந்த
திகழத் தினமுறைந்த வாசனை மிகு
மகிமைச் சுகிர்ததொண்டர் நேசனைப் பல

தீயபாதககாராகிய சூரர்யாவரு மாளவேசெய்து
சிகரக் கிரிபிளந்த வேலனை யுமை
தகரக் குழற் கொள்வஞ்சி பாலனை

மருவுற் றிணர்விரிந்து மதுபக்குலமுழங்க
மதுமொய்த் திழிகடம்ப வாரனை விக
சிதசித்திர *சிகியுகந்த வீரனை யெழில்

மாநகர்க்கு மாரியாகிய மாதினோடு ராதநாயகி
மருவப் புளகரும்பு தோளனை யெனை
பருமைப்பணி கொளுந்த யாளனை

தெரிதற் கரியமந்திரமதைத் தனதுதந்தை
செவியுட் புகமொழிந்த வாயனை யிள
சவியிற் கதிர்சிறந்த காயனை யசன்

தேவநாடுகெ டாதுநீடிய சேனை காவல னாகவேவரு
திருளுற்ற சிவகந்த நாதனை விரி
மறையத் தொளிருகின்ற பாதனை

மருவுற் றிடநினைந்து மனதிற் கனிசிறந்து
மதுரக் கனிவுவந்து கூடவே பல
விதமுற் றிலகுசிந்து பாடவே யலை

வாரிநீரினை வாரிமேல்வரு மாரிநேர்தரு மாமதாசல
வதனப் பணிரெண்டு தாளையே நமக்
குதவப் பணிசமிந்த வேளையே (க)

---

*சிகி-மயில்.

## காவடிச்சிந்து.

### முருகன் துதி.

வேறு

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

சீர்வளர் பசுந்தோகை மயிலான்
செவ்விதழ லாதினிய தெள்ளமுது மயிலான்
போர்வளர் தடங்கையுறு மயிலான்
பொன்னடியை யின்னலற வுன்னுதல்செய்வோமே

குஞ்சர வனங் காம்ல் வீடா
கொஞ்சி மரு வுஞ்சரச ரஞ்சிதவி சேடா
பைஞ்சர வனங்காமல் வீடா
பாலனென மாலையொடு கால நினைவாமே

வல்லவுணர் வழிபாதும் விட்டு
வன்சமர் செய் கந்தனிடம் வழிபடுமைபட்டு
நல்லவுணர் வழிபாலும் மட்டு
ஞானபர மானந்த மோனமடை மாமே

ஒருதங்க மாதங்க முகத்தான்
உத்தமனிட்டனென;வுற்றிட்டு மகத்தான்
வருதந்த மா தங்க முகத்தான்
வாழ்த்து குக நாயகனை யேத்துதல் செய்வாமே.

---

### கழுகுமலை நகர்வளம்.

வேறு.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

தெள்ளுதமி ழுக்குதவு சீலன்
செப்பணு மலைக்குமனு கூலன்
செழியப் புகழ்விளைத்த கழுகுமலை வளத்தைத்
தேனே சொல்லுவேனே

வெள்ளிமலை யொத்தபல மேடை
மீதினிலே காட்டுகொடி யாடை
வெய்யவ னடத்திவரு துய்யவிர தப்பரியும்
விள்ளும்படி யிலகும்

வீதிதொரு மாதிமறை வேதம்
வேதியர்க ளோதுசாம கீதம்
மின்னுமலர்க் காவதனிற் றுன்னுமடப் பூவையிடம்
விள்ளும் கிள்ளைப் புள்ளும்

## காவடிச்சிந்து.

சீதலமுகிற் குளமை கூறும் நிறச்
சிந்துரங்கள் சிந்துமதத் தாறும் உயிர்ச்
சித்திர நிகர்த்த மின்னார் பற்றிபூசின் குங்குமச்
சேறுங்காத நாறும்

நித்தநித்த முங்கணவ ரோடும் கூடி
நேசத்தாற் புணங்கிமணம் வாடும் கரு
நீலவிழி யார்வெருத்த கோலமணி மாலைரத்ன
நெருங்கு மெத்த மருங்கும்

கத்துகட லொத்தகடை வீதி முன்பு
கட்டுதர ளப்பந்தலின் சோதி யெங்கும்
காட்டுவதாவிரண்டு மகார்ட்டுமத யானையிற்பல்
களிறும் நிறம் வெளிறும்

முத்தமிழ்சேர் வித்வஜனக் கூட்டம் கலை
முற்றினு முணர்ந்திடுங்கொண் டாட்டம் நெஞ்சில்
முன்னுகின்றபோதுதொறுந் தென்மலைபின் மேவுதுரு
முனிக்கும் அச்சஞ் சனிக்கும்

எத்திசையும் போற்றுமா ரூரும் அதில்
இந்திரன் கொலுவிருக்குஞ் சீரும் மெச்சு
மிந்தநக ரந்தனை யடைந்தவர்க் கதுவும்வெறுத்
திருக்கும் அருவருக்கும்

துள்ளியெழு வெள்ளிமலை மடங்கும் பலை
கற்றிலும் வளைந்தவழக் கிடங்கும் படி
சொர்ணமலை போனதிலும் மின்னுவதி னாலேபுகழ்
தோன்றும் லோகமூன்றும்

தள்ளவிழ்கடம்பமலர் வாகன் குறக்
கன்னியை விரும்பிடும்வி னோதன் வளர்
கழுகுமலை நகரின் வளமையென் னாவிலடங்
காதே மடமாதே.

---

## கோயில்வளம்.

### வேறு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

சென்னிகுளநகர் வாசன் தமிழ்
தேறும் அண்ணாமலை தாசன் செப்புஞ்
செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வகையிற்புனை
தீரன் அயில் வீரன்

வன்னமயில் முரு கேசன் குற
வள்ளிபதம்பணி நேசன் உரை
வரமேதரு சமுகாசல பதிகோயிலின் வளநான்மற
வாதே சொல்வேன் மாதே

கோபுரத்துத் தங்கத் தூவி தேவர்
கோபுரத் துக்கப்பால் மேவி கண்கள்
கூசப்பிர காசத்தொளி மாசற்றுவி லாசத்தோடு
குலவும் புவி பலவும்

நூபுரத்துத் தொனி வெடிக்கும் பத
நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் அங்கே
நுழைவாரிடு முழவோசைகள் திசை மிமாசுணடியோவென
நோக்கும்படி தாக்கும்

சந்நிதியிற் றுஜஸ் தம்பம் விண்ணிற்
றூவிவருகின்ற கும்பம் எனுஞ்
சலராகிய வடிவார்பல கொடிபீடிய முடிமீதிலே
தாங்கும் உயர்தோங்கும்

உன்னதமாகிய விஞ்சி பொன்னுட்
டும்பர் நகருக்கு மிஞ்சி மிக
வுயர்வானது பெறலாமதில் அதிசீதள யுயற்சாலவு
முயங்கும் மின்னிக் கறங்கும்

அருணகிரி நாவிற் பழக்கம் தரு
மந்தத் திருப்புகழ் முழக்கம் பல
வாடியார்கண மொழிபோதினி வமராபதி யிமையோர்செவி
யடைக்கும் அண்டம் உடைக்கும்

கருணைமுரு கனைப் போற்றித் தங்கக்
காவடி தோளின்மே லேற்றிக் கொழுங்
கனலேறிய மெழுகாய்வரு பலரேவரு மிகவேகதி
காண்பார் இன்பம் பூண்பார்.

சமுகுமலைவளம்
வேறு

இந்துஸ்தான்—காபி-தாளம்-சாப்பு

பொன்னுலவுசின்னிகுள நன்னகரண் ணுமலைதன்
புந்தியின் மகிழ்ந்துநித்தம் நின்றவன் மூந்தி
வெந்திறை யரக்கர்களை வென்றவன் மயில்

போலவேனவின் மீதுலாவு ராதமாதுமு னேகியேயடி
பூவையே யுனதுதஞ்ச மென்றவன் அவ
ளீயுமா வினையுமென்று தின்றவன்
மின்னுலவு சொன்னமுடி சென்னியணி விண்ணவர்தே
வேந்திரனுஞ் சித்தர்களுந் துன்னியே கதி
வேண்டியேயகத்தி லன்பு மன்னியே
வேலவன்கிரு பாகரன்குகன் மேவிடுங்கழுகா சலந்தனில்
மிஞ்சிய வளக்களைநா னுன்னியே சொல்ல
ரஞ்சிதமாய்க் கேளடிவிற் பன்னியே
மூசுவண்டு வாசமண்டு காவின்மொண்டு தேனையுண்டு
மோகனமுகாரி ராசம் பாடுமே மைய
லாகவேபேடையுடனே நாடுமே யலை
மோதுவாரிதி நீரைவாரிவிண் மீதுலாவிய சீதளாகர
முகில்பெருஞ் சிகாமுற்று மூடுமே கண்டு
மயிலினஞ் சிறகைவிரித் தாடுமே
தேசுகொண்ட பாரதந்த வீரதம்பி ராசியண்டர்
தேவதாரு வைக்கரத்தாற் பிடிக்குமே சுற்றி
மேவிய கிளையைவளைத் தொடிக்குமே யொளிர்
சேயசந்திர னோடுரிஞ்சிய தாமரங்களி லேநெருங்கிய
தீங்கனி மதுரபத்தை வடிக்குமே மந்தி
பாங்கினின் றதனையள்ளிக் குடிக்குமே
அந்தர முருவிவளர்ந்திந்திர னுலகுகடந்
தப்புறம்போய் நின்றசையுஞ் சந்தன
தப்பிதமி லாதுகையால் வந்தன மெங்க
ளாறுமா முகநாதனுக்கிடு மாரிபோலவி சாலமுற்றகண்
டத்தனையு நின்றுதனு சாய்க்குமே யண்டப்
பித்தகை தனிலுஞ்சென்று தேய்க்குமே
சுந்தரத்தொ றுக்கிடந்து கந்தரம்ப யந்தொறுங்கக்
கர்ச்சனை புரியுந்திற்ற சிங்கமே நெஞ்சி
லச்சமுற விண்ணிறைமா தங்கமே
காவிலேசில தாவிலேவளர் மாவிருண்டு வேகிருதர்கள்
கார்முக மெய்க்கணைக ளேறுமே யதில்
வார்மதுவால் வாரியுவர் மாறுமே
காலவடி வேனெடிய வாள்கொடிய நாகமுமிழ்
காரிபிணை வாரிகணை பானலே டன்ன
கூர்நயன வேடமின்னை ரேனலே ரச்சுங்க

காலைமேலேறிபோதுவார்கணேடுமாமுனி தேசுவீசவே
கதிரவன் றனதுமுகஞ் சுழிக்குமே அவன்
குதிரையுங் கண்ணிச்சுருக்கி விழிக்குமே

ஓலமலி கோலமில வேலைசூழ ஞாலமீதி
லுற்றவரின் பத்துடனே வானமே செல்ல
வைத்தபல சித்ரசோ பானமே யென்ன

ஓங்குகோங்ககி னுங்கிலாங்கவி பாங்குசேங்கரு வேங்கைபூங்கழை
யொன்றோடொன்றுவம்புகொண்டு நீளுமே தோள்கள்
சென்று சென்று நின்று நின்று மீளுமே. (௫)

---

## வாவிவளம்

### வேறு

இராகம்-ஆனந்தபைரவி-அடதாளம்

புள்ளிகளபமயிற் பாகன் சத்தி
புதல்வனுனகன யோகன் மலை
போலத்தான்றிரண்டு கோலப்பன்னிரண்டு வாகன் நல்விவேகன்

வள்ளிக்கிசைந்தமுரு கேசன் அண்ணு
மலைக்கவிராசன்மகிழ் நேசன் என்றும்
வாழுங்கழுகுமலைவாவிவளஞ்சொல்வேன்யாதே சேவிப்போதே

வெள்ளைநாரைகொத்தும் வேளை தப்பி
மேற்கொண்டெழுந்தகுன மாலை சத்தி
மீறிப்பாயுந்தோறுங்கிறிச்சாயுந் தென்னம்பாளை யுடன்றுழை

தெள்ளும் பிள்ளையன்னப் பேடும் இளஞ்
சேவலான துவுந் தேடும் பின்பு
தேசுமலர்த்தவிசிற் சாமத்தினில் நாடும் உறவாடும்

மின்னுக்குலவிமகி மானும் வரி
வெள்ளைபணிலராசி தானும் மட
மின்னார்விழிசளென்ன பன்னுமொண்கெண்டைமுத்த மீனுமடமானும்

வன்னத்தாமரையைக் கண்டு வாயில்
மகாராகம்பாடிக் கொண்டு மதி
மயங்கிப்பேட்டினுடன் முயங்கியேகிடக்கும்வண்டு கள்ளையுண்டு

அந்தாத்தபெண்கள் நாடி யங்கு
அன்பாகவேவிளை யாடி செல்லு
மன்னவார்கடக்குநன்னடைக்குறுகியன்னஞ் சொல்லும்பின்னும்

மந்த மேதியுள்ளே யெட்டும் இனை
வருனுமெழுந்துமே முட்டும் போது
மடிசுரந்து கன்றுதனை நினைந்து கண்டமட்டும் பாலைக்கொட்டும்

---

துதி வேறு

இராகம்-பியாக்-ஆதிதாளம்

மரகத மிகசித வொளிவத ழிருசிறை
மருவியமயின்மிசை யனுதின முறைதரு வாசன் பவநாசன்
குரகத சுரமணி வளிரத நடவிய
குவலய சாதரனெனுமத னனுமகிழ் கோலன் பரை பாலன்
பரிபுர வணிகல கலவென ணொளிபுரி
பதிரியு வயமதிலவிழ்மறை மலர்நிகர் பாதன் குகநாதன்
திரிபுர மவையொரு நொடிதனிலெரிகொடு
சிதைவுறநகைபுரிசிவன்மனமகிழுப தேசன் முருகேசன்
பதுமநி தியினொடு பணிலநிதியுமொழில்
பரவிய சுரபியுமுறுசுரபுரன்மகள் பாகன் கன யோகன்
சததள நளிநதவிசுமிசை லதியொரு
சதமுக விதிசிரைபதிலுற நிறுவுவி காசன் நட்வாகன்
குரை திரைவரைநிறைபுரதரவுலவிய
குரைவயினடுவுரைநிருதரைமுடுகிய கோபன் கமழ்நீபன்
பரைசிவ பசுவதி யுதவிய சரவண
பவனதுமுககுகன்மிசைமது ரிதகவி பாடுஞ் சுகராடும்(எ)

---

துதி வேறு

இராகம்-ஆனந்தபைரவி-சாப்புதாளம்

பவணகிரி யதனுட்டானே மன்னுவானே பல
பாழிலேயலை யாமலின்புற நாளுமேயருள் மேவுகண்கொடு
பாராய் கன்மந் தீராய்
அவுணப் பகையை முடித்தோனே புண்யவானே
யாகுமேதரு யாருமீங்கலை யாதலாலருள் வாயினம்புரி
யாதே பண்ணுஞ் சூதே
விகாரப்பெரு விதனத்தாலே மண்ணின்மேலே
வீணிலேயுழ லாறுகத்தவி சாகனேபுரி தீயும்வஞ்சமென
மீதே யெண்ணிடாதே

நாசமச்சன் வருமம்போதே பின்னில்லாதே பல
நாளுமேமற வாதுசின்சிறு பாதமாகிய சீதபங்கய
நானே உன்னி னேனே

விமலப்பெருமிதச் செவ்வேளே கன்னல் வேளே தொடு
நீடுபாணம் தான்மருண்டிடை வாடுமாத ரிடம் கெடாவகை
நீயே யெண்ணு வாயே

குமரிக் கெதி பாத நானே நண்ணி னனே யிதழ்
கோதிலாத தபோ பலம்பெறு நீதா பாலகலா துறைந்தருள்
கோனே யென்னுள் வாவே

திடமற்றவனிடைச் சேயே யன்னை நீயே உனை
சேவை யேசெயு ஞானபண்டிதர் நாவினுடினி தாவிரைந்திடு
தேனே பொன்ன னனே.

---

## துதிவேறு

### இராகம்-கன்னடா-ரூபகதாளம்

செந்திமாநகர் வாழ் கந்தா நாதனிரு
செய்யபாதக தஞ்சமே நமக்
குய்யமேவு தஞ்சமே யின்று
செப்புவது கொஞ்சமே கேட்கத்
தீயபாதகவி ரோதமாயம் விட்டு
திரும்புவர்யே நெஞ்சமே

பந்தபாசமிதை எந்தவேளையினும்
பார்க்கும்போதும் தொல்லையே பல்
லார்க்கும்மாவ தில்லையே யொரு
பாரமேரு வில்லையே கையில்
பற்றுநாதன்மாது பெற்றசீதமீது
பனுவல்சூடு வல்லையே கையிற்

மங்கைமார்களிரு துங்கமானபெரு
வாரணங்கொள் கும்பமே முகம்
பூரணச்சந்திர விம்பமே பட
மாகணுகி தம்பமே துடை
மாரவேளரசு மண்டபத்தருகில்
வைத்த ரெண்டு கம்பமே

செங்கைசூரி யோதயங்குலாவ மலர்
சீதபத்ம தளமே வரை
போதுசொற்கள் குளமே யிதழ்

திவ்விய பொற்ப வளமே எனது
சிந்தித் தாற்குமரன் தந்தப் பாதமலர்
சேர்வதெவ்வா றுளமே

வன்ன மானவிழி மின்னைவேங்கடையில்
வக்ரதந்த சங்கமே கொண்ட
வுக்ரதுங்க சிங்கமே யென்ன
மறலிதூதர் போங்கமே யுற்று
வந்தேவேளைநெஞ்சே கந்தவேளைநினை
மருவுறுது பங்கமே

சென்னிமாநக ரண்ணுமலைகவிஞன்
தேசமெங்கு மிசையே பெறப்
பேசுகந்த இரையே சற்றுந்
தீர்ந்திடாத நரையே வைத்துச்
சேவளொளிபத மாவலோடுபணி
தினமுநூறு விசையே (கூ)

## சுரம்போக்கு நற்றுயிரங்கல்
## வேறு.

இராகம்-பைரவி-அடதாளம்.

பாதிராத்திரி வேளையில் வீட்டுப்
பக்கத்தில்வந்து மேவிப் பஞ்ச
பாதக னொரு பாவிச் சிறு
பாவையைமெள்ளக் கூவி கையைப்
பற்றிக்கூட்டிக் கொண்டேகி னன்பதை
பதைக்குதே யென்ற னாவி

சோதனைப்பிர காசமா யென்னைத்
தொடர்ந்ததே பெருந் தோஷம் எவர்
சூதினால்வந்த மோசம் இனித்
தொலையு மோபிள்ளைப் பாசம் இதை
சுற்றத் தாரறிந் தாலெனக்குமுன்
சொல்வரே பரி யாசம்

தேனிலங்கிய காவனந்திகழ்
சின்னிமாநகர் வாசன் செப்புஞ்
செய்யும் அண்ணுமலை தாசன் செப்புஞ்
செந்தமிழ்க்கரு ணேசன் நாளும்
சிந்தனை செய்யுந் தொண்டர் தீவினை
தீர்த்திடுமேரு கேசன்

சானிலம்புகழ் சழுகுமாமலை
　　நாயகன் பாண்டி　　　நாட்டில்
　　நாணம்விட்டுத்தன்　　　பாட்டில்
　　நண்ணிய பாலைக்　　　காட்டில்
　　நடக்கவேண்டுமுன் னடக்கமாகத்　　　தெய்வம்
　　லபித்ததோ மண்டை　　　போட்டில்

மையல் கொண்டொரு தையல்பின்செல
　　வயதுமீறின　　　மாதோ
　　மார்க்கந் தோன்றின　　　தேதோ
　　வாசனைப்பல　　　னீதோ
　　மாதம்பத்துஞ் சுமந்து பெற்றவன்
　　வயிறுந்தானெரி　　　யாதோ

செய்ய பஞ்சணையும் பொருந்து
　　சிவந்து கொப்பள　　　மாகும்
　　சிப்பழுமென்று　　　நோகும்
　　சீரடிரண்டும்　　　வேகும்
　　தீயுங் கானலில் வேணிலாவுர்
　　தீயிலெப்படி　　　பேர்கும்

தேடினுங் கிடையாத தாகிய
　　திரவியக்கனு　　　கூலம்
　　செனித்த பெண்ணுக்குச்　　　சீலம்
　　திரும்பினதென்ன　　　சாலம்
　　செய்தானோ விந்தர　　　சாலம்

காடுசேர் கையிற் காடுவேங்கைகள்
　　காட்டுமேயாரே　　　வாரம்
　　காதிற்கேட்க　　　சாரம்
　　கலங்குவா னந்த　　　நேரம்
　　காதலி தன்னை யாதரித்துயிர்
　　காப்பதுவேலன்　　　பாரம்

## தலைவி யிரங்கல்.

### இராசம்-சாவேரி-அடதாளம்.

　　நேயமாய் பணியண் ணுமலைக்குதவு நீதனைக்
　　சழுகுமலை　　　நாதனை
　　நினைக்கநினைக்கமீறி யெனைக்கொள்ளுதே மனவேதனை
கோமளக்கடலிலே மிகுத்ததிரைக்　　　கூட்டமே
　　அங்கமிலான்போ　　　ராட்டமே
　　கோரமேகிளைந்தாற் றீருமோ வெனக்கு வாட்டமே.

வெள்ளத்திரையின்மேலே துள்ளித்திரியுஞ்சுறு மீனமே
பிணியுண்டோ மானமே
தேக்கங்கொண்டதனாலேற்றதில்லையன்னப் பானமே
அள்ளற் சுழிகறையுண் மெள்ளக்குலவிவரு மாமையே
கொடிமனத் தீமையே நாளு
மதிகரித்திடலா லதமதிக்குதிந்தத் சீமையே
பொங்குமேதுலர்க ளெங்கும்பரிமளிக்கும் யுன்னையே
பெற்றுவளர்த்த வன்னையே
போதும்வை துவைது மோதுகிறாய்பாவி யன்னையே
தங்குநிலத்திலம்புரி யிங்கிதவலம்புரிச் சங்கமே
தென்றலு மொரு சிங்கமே போலத்
தாங்கவேமயங்கி யேக்கமாமெலிந்தே னங்கமே
மங்கைமார்கள் தங்க ணேர்பவள வல்லியே
பிரியேனென்று சொல்லியே போன
வாசக்கடம்பன்வர நேசத்துடன் சொல்லுமே பல்லியே
அங்கயத்தினிறை பங்கயத்துள்ளுறை யன்னமே
பிரியம்வைத்து முன்னமே கட்டி
யாதரித்தமுரு கன்வரக்காணேனே முன்னமே.

தலைவி ஊடல்.

வேறு.

இராகம்—தேசிகதோடி—ரூபகதாளம்.

ஆறுமுகவடி வேலவனே கலி
யாணமுஞ்செய்ய வில்லை சற்று
மச்சமில்லாமலே கைச்சரசத்துக்
கழைக்கிறாயென்ன தொல்லை
மீறியவன்பிலாதபெண்ணோடே
விளம்பாதேவீண் பேச்சு சும்மா
வெள்ளைத்தனமாக துள்ளுகிறாய் நெஞ்சில்
வெட்கமெங்கே போச்சு
மேட்டிமை யென்னிடங் காட்டுகிறாயினி
வேறில்லையோ சேர்வி இதை
வீட்டிலுள்ளோர் கொஞ்சங் கேட்டுவிட்டாலது
மெத்த மெத்தக் கேலி
தாட்டிகஞ்சேர்கழு காசலமாநகர்
தங்குமுரு கோனே இந்திர
ஜாலத்தினாலென்னைக் காலைப்பிடித்தாலும்
சம்மதியே னானே

ஆத்திரைகாரர்க்குப் புத்திகொஞ்சமென்பா
ராரும்பழ மொழியே நீயும்
அப்படியென்னைபலாத்காரஞ் செய்திடில்
ஆச்சுதுபெண் பழியே

சக்கரைக்கட்டிபோல் வள்ளிதெய்வானையாந்
தையலுனக் கில்லையோ இரண்டு
தையலரைச்சாரும் பையனுனக்கென்ன
தானுமொரு நிலையோ

அம்புவியிற்சிறு பெண்களினின்மேலுனக்
காசையேன் காணுதையா நீர்
ஆக்கப்பொறுத்தாலு மாறப்பொறுதவர்
ஆகவே தோணுதையா

நம்புமண்ணாமலை தாசன்பணியும்
நளினமலர்ப் பாதா கொஞ்ச
நாளைக்குமேலொரு ஆசைக்கயற்கண்ணா
நாட்டினா லாகாதா

---

பாங்கித்தலைவியின் நிலைமைக்கூறித் தலைவனையழைத்தல்.

வேறு.

இராகம்-ஆனந்தபைரவி—ஆதிதாளம்.

கண்ணாயிரம்படைத்த விண்ணூரிடந்தரித்த
கனவயிரப்படை டவன்மகளைச் சாருங்கர்த்தனே திருக்
கழுகுமலைப்பதி யனுதினமுற்றிடு சுத்தனே

அண்ணாமலைக் கிடர்களண்ணாதொளித்துமிக
வசுமகிழத்தன தருளையளித்திடு மையனே திசை
யரவமும் வெட்குற மயிலை நடத்திய துய்யனே

என்னேரமுமனதி லுன்மீதிலே சிந்தைகொண்
டெழுதிய சித்திரமென மவுனத்தினி லிருக்கிறாள் வண்ணத்
திடுகிற புத்தமுதினையும் வெறுத்தறு வருக்கிறாள்

கும்பத்தினைச் சினந்து அன்னை நினைத் தெழுந்து
கொடியிடைமுற்றிலு மொடியவளைத்தது அங்கையே மனங்
குலவு கடப்பினில் நினைவது வைத்தனள் மங்கையே

செம்பொற் சிலம்புகள் புலம்பப் பெருந்தெருவிற்
நிகழ்தகு சிற்றில்கள் புரிவதைவிட்டவள் தியங்கினான் உந்தன்
றிருவழகைக்கரு விழியிலிருத்தியே மயங்கினான்

பேரொடுதற்குரிய கூரார் மலர்க்கணையைப்
புகழ்பெருசித்தச தனுவதனைப்பெரு புருவத்தாள் தவம்
புரிபவரைத் தனதடியில் விழப்புரி பருவத்தாள்
சீராக நின்மனது பாராமுகமிலாது
திருவமுதக் கனியிதழை யழுத்தியே காரையா யிந்தத்
தெரிவையுளத்துனை வலதுபிடித்தவ ராரையா

---

தலைவி பாங்கியைத் தூதுவிடுதல்.

வேறு.

இராகம்-தேசிகமுகாரி-அடதாளம்.

பூமிமெச்சிடு மண்ணுமலைக் கோர்துணை யானவன்
மயில்வானவன் ஒரு கானவன் தினை
புனத்தை காக்கும் வள்ளி
வனத்தை பார்க்க மெள்ளப் போனவன்

நேசமுற்றசமு காசலேசனையே தேடுதே
மனம்வாடுதே கால்தள் ளாடுதே யிரு
செங்கை தங்கிநின்ற சங்கினங்கள் க ளின்றுடுதே

தென்றலானபுலி வந்துகோபமோடு சீறுதே
தடுமாறுதே நிதங் கோறுதே மெத்தத்
தீமையா மிருளிற் சோமனிலவு மீறுதே

குன்றமானபுயம் ரண்டும்பூரிப்பைக் கொண்டுதே
தேமன் மண்டுதே வெப்பங் கண்டுதே மலர்க்
கொம்புபோலமென்மருங்குலானதுந் துவண்டுதே

உள்ள மெல்ல மெல்ல முருகனென்று நினைந் துருகுதே
மூத்தங்குருகுதே கண்ணீர் பெருகுதே என்ற
னுச்சிக்கேரியமாயப்பித்தங்கிறுகிறென்றுவருகுதே

வள்ளமேவும் பசும் பாலுக் தேனும் மரு வறுக்குதே
கசந்திருக்குதே துன்பம் பொறுக்குதே வன்ன
வருந் தாறுமாறுகக்கிறவே சோகமும் மருக்குதே

பாரமானசிந்தை யோரம் வேடனம்பு பாயுதே
யுடல்தேயுதேமலர் தீயுதே கொடும்
பாவியானமதி யாவிசோரவந்து காயுதே

பாரவேளினல் கோரமான தொழில் வாதையே
யெனுந்தீதையே தீரத் தூதையே சொல்லி
வர்ட்டுந்தீர் குகனைக்கூட்டிவாடியடி கோதையே

## பாங்கி தலைவியின் அவயவத்தருமை சாற்றல்.

### வேறு.

### இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

| | | |
|---|---|---|
| சந்தவரை வந்த குக | நாதா | பரை |
| மந்திர மனோன்மணியாம் | பாதா | மந்த்ர |
| சண்முக சடாட்சரவி | நோதா | |
| குழைக்காதா சூரர் | வாதா | வன |
| சஞ்சரிதெண் குஞ்சரி | சமேதா | |
| செந்தமிழண்ணாமலையை | யாளக் | கொண்ட |
| கந்தவரவிந்தமலர்த் | தாளா | கட்க |
| சிந்தடி கடம்பணியுந் | தோளா | |
| நெடுநாளா மறை | வாளா | வுனைத் |
| தேடார் குயிற் பேடுறங் | கேளாய் | |
| சுந்தரமிகுந்த குழன் | மேகம் | அவள் |
| சொந்தநுத விந்துவிலோர் | பாகம் | திருத் |
| தும்புருவம் வில்லோடுசி | நேகம் | |
| தவயோகம் வென்ற | னேகம் | வஞ்சர் |
| துஞ்சுவிழி நஞ்சினிலும் | வேகம் | |
| கந்தமிலிகின்றமுக | மிந்து | வள்ளைத் |
| தண்டுசெவி யென்பதுவே | தந்து | கன்னம் |
| சாணை நுணி நாசியின்ப | சுந்து | |
| மதுச்சிந்துதல் பொ | ருந்து | சிறு |
| சண்பகம் துப்பாமிதழ்ச்சி | வந்து | |
| செங்குமுத புட்பமதை | யொத்து | மொழித் |
| தேனுதவும் வாய்நகையே | மூத்து | கண்டஞ் |
| சீதரனூரு துவர | நத்து | |
| சொற்றித்தித் துப் பாகைக் | சுத்து | விடச் |
| செய்யுமென வுண்ணலாமு | ளத்து | |
| குங்குமவாசங்கோ | தண்டம் | முன்கைக் |
| கோமரசமாவுவமை | விண்டம் | கையைக் |
| கோகனகதமரவென்ம | ருண்டம் | |
| ஆழிவண்டங்குருக் | கண்டம் | நெடுங் |
| குங்கெளிறு சிறுகெளித் | துண்டம் | |
| கட்டுகதிர் பட்டுமனு | வம்பு | கிழி |
| பட்டுவிழி விட்டிடவெ | ழும்பு | சிற |
| கட்டழகாய் வட்டமிட்ட | சொம்பு | |
| யானைக்கொம்பு சிவ | சம்பு | குடம் |
| கைக்கும் வளையாத பொற் | பிரம்பு | |

## காவடிச்சிந்து.

மட்டமிழ் பசுந்தளப மாலே செங்க்ண்
வளருகிறதவிசெனமோ ராலே சிறு
வயிறுமயிர் சிற்றெரும்பு போலே
விரைவாலே வெள்ள மேலே சுற்றி
வந்தசுருயுந்தியிடை நூலே
தரம்புசற்பெண்ணுக்கின்ன முண்டு றுடை
தங்கநிறச் செங்கதலித் தண்டு முழங்
தாட்குவமை கேட்கிலவை நண்டு
சினைகொண்டு வளர் பெண்டு வரால்
கணைக்கா லெனுமி ரண்டு
பாடுதரா கயர்குதிக்க துகமே நனி
பரவு பரவடியிணை புத் தகமே கடற்
பவளமதி தசவிரல்கள் நகமே
யம்போருகமே புக யுகமே மயில்
பண்ணுமிளஞ்சாயலையா சகமே
மேனகையோ ர்வசி யிந்த்ராணி செல்ல மிக்க
திருமுக் கயலை வாணி இந்த
மின்னரசு தன்னுருவங் காணி
னெஞ்சுநாணிமலாப் பாணி தலே
மீதுகுவித்தொழுவார் பேணி
சேனையொடு வந்துகருங் காவி யம்பைச்
செப்பகரும்புச்சிலவை தோவி சண்டை
செய்யவொரு ரூபமிலான் பாவி
எங்கடேவியூட மேவிரிட லாவி தனைத்
தீர்க்குமுளங் காத்திடுவாய் மேவி

### தலைவன் வருத்தஞ் சாற்றல்.

### இராகம்-பைரவி—தாளம்-ஆதி.

வன்னத்தினை மாவைத் தெள்ளியே யுண்ணும்
வாழ்க்கைக்குரக்குல வள்ளியே யுயிர்
வாங்கப்பிறந்திட்ட கள்ளியே யிரு
வடமேருவை நிகராகிய
புயமீதிணி பாலாமணி
மாலைப்படிரெனத் துள்ளியே விழ
வான்மதி வீசுந்தீ யள்ளியே
கன்னத்தினிற் குயிற் சத்தமே கேட்க
கன்றதுபாறென்றன் சித்தமே மயக்
கஞ்செய்யுதே யாசைப் பித்தமே யுடல்
கனலேறிய மெழுகாயின
தினியாகிலு மடிபாதகி

கட்டாயம்நீயொரு முத்தமே தந்தால்
கைதொழுவேனுனை நித்தமே

வாடியிருப்பது வஞ்சமோ பொல்லா
வான்கருக்கல்லோவுன் நெஞ்சமோ கொண்ட
லையிற்பயித்தியஞ் கொஞ்சமோ சிலை
மதன்சோதரி யெனையாதரி யனைவாழக்கையில் சுகமாகிய
மார்க்கமுனக்கென்ன வஞ்சமோ ஒரு
வார்த்தையுரைக்கவும் பஞ்சமோ

தேடக்கிடையாத சொனமோ உயிர்
சித்திரமேமட வர்னமே அதோ
சிக்குது பால்நயி ரன்னமே யொரு
சிலைவேற்குற மகளாகுநின் சயலார்விழு யெனையேதுயர்
செய்வதுகண்டிலை யின்னமே என்ன
செய்தேனோ தான்பழி முன்னமே

---

தலைவனைக்கலந்த தலைவி பாங்கிக்குக்கூறல்.

இராகம்-தோடி-தாளம்-சாப்பு.

செந்தின் மாநக ரந்தனில்மேவிய
தேசிகனுமுரு கேசன் மயில்
வாசிபிலேலுமுல் லாசன் சிறு
திங்களும்பண சங்கபாசன
முந்திலங்கிய கங்கையாரொடு
செஞ்சிருடை சிவனார்செவி
சேரமுன்னோதுப தேசன் அடி
யார்தமையாள்விசு வாசன்

எந்த நேரமும் வந்தனைசெய்தபடி
எண்ணும் அண்ணாமலை தாசன் றுதி
பண்ணும் மெஞ்ஞானவி லாசன் என்னோ
தடிந்தெழுந்து தயங்குமாலையில்
வந்துவண்டு முழங்கும்சோலையில்
இன்பசாகர மாகியயிதங்க
ளன்புடனேசெய்தான் மானே அந்தச்
சம்ப்ரமமென்னசொல் வேனே

மங்கைமார்பல ரும்புடைசூழ்தர
மாமலர்கொய்திடச் சென்றேன் அங்கோர்
பூமரத்தேதனி நின்றேன் சந்த

மண்டலங்களை வென்றவானர
மைந்தொடொன்று மிருந்தவார்மது
வண்டலோடு டம்பெனுமாரமும்
தோன்றிடச் சேர்ந்தான் என்
சீரைப்பார்ப்தேகளி கூர்ந்தான்

பங்கயாசன மேவுறைநான்முகப்
பாதகனுமலர்க் கைதரன் தொண்டன்
சோகிலையெப்படிச் செய்தான் அடி
சஞ்சாஞ்சினு மஞ்சுசீரடி
கொஞ்சுரஞ்சித வஞ்சியேபுவி
பட்டுநீகிலிற்க வொண்ணுதென்று
பண்மலர்மெப்பதையொன் றிட்டான் பின்பு
மென்மலரொந்தன் கைதொட்டான்

---

## வாவிவளம்.

### வேறு.

கன்னல்சூழ்பழ னம்புடைசூழ
காசலந்தனில் வாழ்பிரதாபனே கன
வாசமெங்கும் கமழ்கின்றநீபனே வளர்
காதலோடிரு போதிலும்பல
போதினார்பணி வார்மனத்துறை
காரிருட்குலைவீக்கிய தீபனே அதி
சூரபத்மனைத் தாக்கிய கோபனே

சென்னிமாநகர் வாழுமண்ணலே
செப்புஞ் செந்தமிழுக்கதி ரேசனே சிவ
சுப்ரமண்ய னெனும்பிர காசனே கொடுஞ்
சிந்தைநைந்து புலம்பிகின்றிரு
மந்திரந்தனில் வந்தடைந்தனே
சேவிக்குங்குண மென்றனைக் காகுமோ
பாவிக்குத்துயரெப்படி போகுமோ

வந்தவர்க்குப் பழம்புளிக் காடியே
தந்திடச்சகியார் தமைத் தேடியே பிர
பந்தமெத்தனை யெத்தனை கோடியே குலை
வாழையின்பழமோ கனிந்திடு
மாழையின்கனி யோவெனும்படி
மதுரிகம்பெறவே நிதம் பாடியே பொரு
பரிசும்பெறுதுளம் வாடியே

வெந்தரைக்குள் வெடிப்பிடை பாலையே
சித்துவித்தரைப்போல்வெறும் வேலையே செய்யும்
வீணன விளங்குன்றண்டைக் காலையே சந்த
வேலையுந்துதி கூறவுந்துயர்
நீருவெம்பவ மாதவம்புரி
வில்வவேணிசேர்கற்பகச் சோலையே
செல்வனே யெனுங்கற்பகச் சோலையே

## தலைவியின் ஊடல்.

செந்தூர் வளர்முருக நாதா அருணோதயம்
செந்தாமரை நிகழும் பாதா திகழ்
சிந்தையிலண்ணுமலைசெய் நிந்தையையெண்ணுதருள்செய்
சிந்திர வேற்கரவிநோதா உனதுவஞ்ச
செய்கை யின்னமுந்தெரியாதா
சந்தோஷ மாகவேபோய் வீடு தோறுஞ்
சரசங்கொண்டாடுவதே பாடு வந்துன்
றன்னுடனே சேர்பிரியக் கன்னியர்கள் பேர்வரியச்
சஈஸ்திரம் வேணுமோவெள்ளேடு தனித்தோரிடஞ்
தயங்கியேமேயுமே வெள்ளாடு

வேசையர் வாசலிலேசென்று தம்பலங்கக்ஷ
வெட்கமில்லாமல் வாங்கிமென்று தின்று
பெத்தப் பயித்தியங்கொண்டு சுற்றித்திரிந்தே மருண்டு
வீடுதேடி வந்தாயே யின்று தொடவேமாட்டேன்
வேணுமென்றாலும் போடுகொன்று

ஆசைகொண்டவருக்கு ரோசங் கிடையாதென்பார்
அப்படிக் காகில்விசு வாசம் வைக்கும்
அந்தவிலைப் பெணடுகளைச் சொந்தமெனக் கொண்டனையே
யாணுமுன்னைப்போலே மோசம் போனவருண்டோ
ஆருஞ்செய்கிறாரே பரிகாசம்

கந்தா செய்யாதே பலவந்தம் புதுமலரைக்
கசக்கி யறிவார்களோ கந்தம் கற்றுக்
காதலிலாற் சினந்தார் கையை வலியப்பிடித்துக்
கசக்கினலாமோ சுகாநந்தம் உனக்கெங்கும்
கனவிலுமில்லையினி தொந்தம்

எந்தப் பிறப்பினுமே தள்ளி யுனையல்லாமல்
எவளையும் பாரேனென்று சொல்லி யூரில்
எத்தனை பாத்தையரோ நித்தமூநீ நத்தினையோ
இப்படிக் க்ாசிகாஞ்சி டில்லி கன்யாகுமரி
எங்கும் பார்த்தாலுமில்லை சல்லி

கங்குகரையில்லையேஜாடை சொல்லிவைப்பவர்
சுட்டுகுருயே யெதற்காடை மானங்
காக்கவல்லவர் வெண்பாலே சேர்க்கையிலாதே யன்பாலே
காத்தாயே வேசைமாதர் மேடை கைவசமோ
கலப்புல்லூர் தின்றுலுமே காடை

குங்குமம் சந்தனஞ் சவ்வாது கதம்பங்
குமுகுமென்றே புயத்தின்மீது வாசங்
கொட்டுதெறி னெற்றி சந்தப் பொட்டொடு பிகட்டுதிந்த
கோலம் புதிதாய் வந்ததேது நடந்ததெல்லாங்
கொஞ்சம்சொல்வாய் பண்ணுதே சூது

---

## தலைவி வருந்துதல்.

பாளைவாய் கமுகில்வந்து பாளையாய் வயல்சூழ் செகதூர்
பாலனம் புரியவந்த புண்ணியா எந்த
காலையுஞ்செய்கிறாய் முன்பின் னெண்ணியா
வேளையோ விடிந்திதையா நாளைவாரே னின்றுகையை
விட்டிடென்றாலும் விடாமற்பிடிக்கிறாய்
யொட்டவே மடுவரிந்து குடிக்கிறாய்

நித்தமு மண்ணுமலைசெய் குற்றமெண்ணு வேலாகண்டீர்
நின்னிதழ் பவழங்களில் வெள்ளையே தென்றா
லென்னசெய்வேனுனொரு பெண்பிள்ளையே
மத்தநிகர் காத்தினிலே மெத்தநகரேகைபட்டு
மாலைபிறைபோலவேதான் தோணுதே இது
கேலித்துறையாகுமென்று காணுதே

உன்னையும் விவாகமில்லா என்னையுமே அன்னைகண்டா
லென்னவென்று சொல்வாளடா பாவியே யின்று
தின்றிடுவே னென்பால் பச்சைநாவியே
கன்னல்சாடையாகவந்தேன் றன்னை அணைவாய்நீயொன்று
சாற்றிடுமென் னுண்மையான சொல்லைபோ விட்டுக்
கூற்றுவன்போல் வந்தாயென்ன தொல்லையே

சாறுசேர் கரும்புருசி யாயிருந்தாலும் வேரோடே
நான்பரித்துத் தின்னுவது ஞாயமோ இது
ஆண்பிள்ளைக்கிதுதான் சம்பிரதாயமோ
நாறுதர மாறிமாறி வேறுவேறு வார்த்தை சொன்னால்
நேருமோ நோகாதோவெனக் குள்ளமே கொண்டு
போகுமோ கிணற்றுநீறை வெள்ளமே.

## நற்றாயிரங்கல்

### இராகம்-தாளம்-வேறு,

என்னடி நான்பெற்றமங்கை இளநங்கை முகசங்கை யுன்றன்
அண்ணாமலைக்கவி ராஜன்
விடமேயுள கணையாழிகள் கரவேயுள வளைநருங்கிய
காரணமேதடி புள்ளி மயி
லாரணன்நேசமோ கள்ளி

அன்னவயற் செந்தூர்வாசன்மந்தகாசன் அன்பர்நேசன் நாளும்
அண்ணாமலைக்கவி ராஜன் பாடும்
அமுதச்சுவை தருமுத்தமிழ் களபத்தொடு கமழ் பொற்புய
அற்புதவேலவன்செய் ஜாலம் தன்னாற்
கற்பழிந்தா யோவிக் காலம்

சித்தச ஞானமநூலை யந்திமாலையோடு காலை வைத்து
சித்திப்பதாச்சுதன் வேலை
சின்னத்தன மடவஞ்சியே புன்னைப்பணி வொடுகெஞ்சியே
சேவற்கொடியோன் பூஞ் சோலை தனிற்
றேடிப்புரிந்தானோ மாலை

மெத்தப்பிரமை கொண்டேங்கி புடல்வீங்கி நேசப்பாங்கி மாரை
விட்டுத்தனியாக நீங்கி வடி
வேலுக்கதிபதியாலே மேலிட்டலறிய தையலே
வெட்கத்தைப் போக்கடித் தாயோ யிழி
வேசைதனம் படைத் தாயோ

இன்னமும்விவாகமேயில்லை கமழ்கொல்லை மலர்முல்லை குழ
லெங்குஞ் சிங்காரித்து மில்லை சந்த
மினிதாகிய களபந்தனை கனமேருவி லணிகின்றனை
இப்படியுந்தலை விதியோ பெண்ணே
செப்படியே யிது மதியோ

சன்னதமாமசைப்பேயே பிடித்தாயே வேப்பங்காயே போலச்
சாதம் வெறுத்தாயே நீயே பெருஞ்
சண்டாளியே கண்டோர்திரள் கொண்டேபழி விண்டார்நம்ம
சாதிக்கெல்லாமொரு வடிவே வாத்
தான்பிறந்தாய்வந்து நடுவே

வண்ணப்பயிரவி தோடி ராகம்பாடி யுறவாடி நல்ல
வார்த்தையாலே மனங் கூடி யுன்றன்
வன்னப் படிசம்போ லொளிர் கன்னத்தினி லுங்தேனிதழ்
வாயினுங் கொஞ்சம்பற் குறியோ வைத்தான்
வாலைமகனுக்கும் வெறியோ

## காவடிச்சிந்து.

ணாங் குமரவேள் பாலே சென்றதாலே யினிமேலே வயி
ரெட்படியாகிலுஞ் சூலே வரு
மன்றேமன துளமஞ்சுது நன்றேசொலி லெனவஞ்சக
மில்லைக்கிழவன் சொல்வீணைக் கார்க
வேற்காதென்றாலுங் கண்ணே

காலம்நீடத் தலைவியிறங்கல்-வேறு,

சுநிகர் குந்தள மின்னே மததளங்கள் விகசிதஞ்செய்
வாரிசாதனத்தில்வாழ் பொன்னே செய்ய
வன்னமேயொளி சொானமே நடை
யன்னமேயிதை பின்னமே பெற
யதிவிருப்பத்துடனுரைக்கும்
வார்த்தையைக் கேளாசை மிஞ்சியே

சுவயதான பருவந்தனிலெனது சிறுமணமுன்
அங்கஜவேள் போல யுருவம் பெறறே
அன்றுவந்து நயந்துமாலையினெஞ்சழிந்து மயங்கவே யுணர்
ஆறுமுக வேலவனையே
நினைவுகொண்டே மனமுருண்டே
ஆறுதில்லை யென்னவினையே

ணிகுளம் மேவியவாசன் இனியதுதி யனுதினமுஞ்
செய்திடுமே் அண்ணுமலைதாசன் பாடுஞ்
சிந்துமீது மிகுந்தமோக முருஞ்சிலகு சஞ்சரோருக
திவ்விய முகங்க ளாறுமே
கண்களிற்கண்டால்! துன்பங்க ளெல்லாம்
காதவழிமேயாடி சேருமே.

அண்ணுமலை ரேட்டியார் காவடிச்சிந்து முற்றிற்று.

---

## பஞ்சரத்னத் திருப்புகழ்.

லடிவயிற்று மகன்போலேயொரு புதையலெடுத்ததனம்போ
ாளி வயிரமழித்தகளம்போலேயுள மூலைமானுர்
லியவணைத்தசுசம்போலே கதிரொளிவிடுரத்ன வடம்போலே
மிடிபுட்பவனம்போலேசுர நதிபோலே
லைகடல்பெற்றிடுபெண்போலேவருபுலவர்தமக்கிருகண்போ
ார வருகிலடுத்த சலம்போலே யுன தழகாமோ
முதுபுசித்தாசம்போலேதிரை கடன்மடைவிட்டசலம்போ
மதிசயமுத்தமி ழன்பாலேதனி னருடாராய்

கலகலெனச்சொல் சிலம்பாசீர் பெறு மலைமகள்பெற்றகு
தாய் மாமத கரிமுகனுக்கொருதம்பி டானகர் மகளாபே
கடிமலர்மொய்த்த கரும்பேஞானிகண் மன துருசித்த கரும்
யானவர் கவலைதனித்தொரு ளன்பேமாயவன் மருகோ
குலிசன்மகட்கொருநண்ப வேழிசைகள்சுவைதத கடம்
போய்வரு குறைகடலுக்கொரு சம்ப்ரமனுய்வரு: வடிவே
கொடியபிணிக்குமருந்தே தாள்பணி யமரர்தனக்கு விருந்
தோகைகொள் குருகுநடத்து துரங்காவேரக முருகோ
தேனைவடித்துச் போரிந்ததோ கொதிபாலுடனெக்கக் கல
தோ நல் சீனியிவிட்டுப்பிசைந்ததோ பல கனிதா
தேடியெடுத்துப் பிழிந்ததோ நிறைபாகுபதத்திற் சமைந்த
விவை சேரவுருட்டத்திரண்டதோ நவ ரசமீ
ஞானமூலைத்துப்படர்ந்ததோ வதிலேயெழுபுட்பச் சுகந்
மறைநாமகள் வித்தைப்பிரசங்கமோவென வுரைநா
நாவலர்மெச்சிப்பணிந்துதாழவு நீயெனைமெச்சித்தனித்து
வு நானுனைமெச்சிப்புகழ்ந்துபாடவு மருடார
யானைமதப்பட்டெழுந்ததாமெனவேயிரு பத்மச்சதங்கை
வீட வாறுமுகத்துக்குழந்தையாயரு ளனைமார்
ஆறுமுலைச்செம்பருந்து பாலனாறு மலைக்குட்சொரிந்தவா
ன வாறுமுலைக்குச்சிரந்தபாலதி லமையா
சோணமழைக்கொர்த் திருந்துலாவரு ரேசமுத்ரத்தாங்க
லெழு சூரியனெக்கத் திரிந்துலாவிய புதல்வோ
கோமலைக்குக்கடம்புபோல விராலிமலைக்குக் கொழுந்துபோ
யர் ஸவாமிமலைக்குக்கடம்புபோல்வரு முருகோ
கவியையசைத்துத் தொலைத்துவிட்டொரு பிணியையடித்
துறத்திவிட்டெழு கவலைநெருப்பை தணித்துவிட்டற நெறியா
கடினகசப்புக் கினிப்புவிட்டென துயரிலழுக்கை துடைத்
ட்டொரு கருணைமலைக்கு குளிகைவிட்டினி யலையா
அலையுமனத்தைப் பிடித்துவைத்தகி லுவையுமிருட்டுக்கரு
வைத்தெனையடிமைக்கருத்துறமுற்றிலு மதனு
மலைகள்பயப்பட்டொளித்பதற்கொரு புகவிடமற்றுத்தவி
விற்பவும் வடவரைமிக்குச் சலித்திருக்கவும் மதனு
குல்வரைவிட்டுத்திசைக்களிற்றினை யுடலைமிதித்துங்கிழித்
ற் சொறி குருதிகுடித்துப்பெருத்தசெப்பிள முலையா
குறாகளைக்கைப்பிடித்துமற்றொ ருகுறமகளைக்கைப்பிடி
மிக்குள குளகிரியைக்கைப்பிடித்திருக்குமெம் முருகேர்

பஞ்சரத்னத் திருப்புகழ் முற்றிற்று.

## திருப்புகழ்.

---

இசைந்தசூலம் கரியுரிபோர்வையும் எதிர்நீறுங்
இலங்கும் நூலும் புலியுடையாடையு மேருகாலும்
அசைந்ததோலும் திங்களுமாலையு முடிமீதே
அணிந்தாசன் பரிவுடனருளிய குருநாதா
உகந்தசூரன் கிளையுடன்வேரற முனிவோனே
உகந்தபாசக் கயிரோடு தூதாகண் டெலியாதே
அசந்தபோதென் துயர்கெடமயில்மிசை வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய பெருமானே

---

### வேறு சந்தம்

வங்கார மார்பிலணி தாரொடுயர் தோடசைய
கொந்தார மாலைகுழ லாரமொடு தோள்பு
வண்காதி லோலைகதிர் போல்ஒளிவீச இதழ் மலர்போல

மஞ்சாடு சாபநுதல் வாளனைய வேல்விழிகள்
கொஞ்சார மோககினி யாககைகை பேசியுற
வந்தாரை வாருமிரு நீருறவேனுசமைய விடுமாதர்

சங்காளர்சூது கொலை சாரர்குடி கேடர்குழல்
சிங்கார தோளர்பணி ஆசையுளர் சாதியிலர்
சண்டாளர் சீச்சியவர் மாயவலை யோட்டியே யுழலாமல்

சங்கோசை நாதமொடு கூடிவெகு மாயையிருள்
வெங்தோட மூலஅழல் வீடுவுப தேசமது
தன்காதிலோதியிருபாதமலர் சேர அருள் புரிவாயே

சிங்கார ரூபமயில் வாகன நமோநமென
கந்தா குமராசிவ தேசிகா நமோநமென
சிந்தூர ராகுமலை தூள்படவை வேலைவிடு முருகோனே

இங்கித வேதபிர மாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுவன மேவிவள்ளி நாயகியை
இன்பான தேனிரச மாரமுதை விடாதசர மணிமார்பா

எண்டோளர் காதல்கொடு காதல்கரி யேமருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகோ
டென்காதல் மாலைமுடி ஆறுமுக வாவமரர் பெருமாளே.

முற்றிற்று.